தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்

சென்னை-32



ஏழாம் பட்டமளிப்பு விழா

மாண்புமிகு தமிழக முதல்வர்

முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி

அவர்கள் ஆற்றிய பட்டமளிப்பு விழாப் பேருரை

இடம் : சென்னைப் பல்கலைக்கழக
நூற்றாண்டு விழா அரங்கம்

நாள் : 21.03.1997 - வெள்ளிக்கிழமை

நேரம் : மாலை 4.30 மணி

பல்கலைக் கழக வேந்தர் மேதகு தமிழக ஆளுநர் செல்வி பாத்திமா பீவி அவர்களே,

இப்பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களே,

இப்பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் மேஜர் இராஜா அவர்களே,

தாய்மார்களே, நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் உளங்கனிந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னை மாநகரில்-எழிலும் ஏற்றமும் சூழும் வகையில் அமைந்து, விழாக்கோலம் கொண்டு திகழும் இந்த இனிய மண்டபத்திலே உங்களை எல்லாம் காணவும், என் உள்ளத்து உணர்வுகளை உங்களோடு பகிர்ந்து கொள்ளவும் கிடைத்த நல்வாய்ப்பினை எண்ணி இதயம் களிக்கிறேன்.

என் இனிய நண்பர் - மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரில் அமைந்துள்ள இந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தை 1989-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 31-ஆம் நாள் இதே மண்டபத்தில் கழக ஆட்சியில் தொடங்கி வைத்ததையும் 14-10-1990 அன்று நிகழ்ந்த இப்பல்கலைக் கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவில் பங்குபெற்று விழாப் பேருரை நிகழ்த்தியதையும் ஒரு கணம் நினைத்துப் பார்த்து அந்த பசுமையான நினைவுகளோடு இன்று இந்த எம்.ஜி.ஆர். மருத்துவப்பல்கலைக் கழகத்தின் ஏழாவது பட்டமளிப்பு விழாவிலே கலந்து கொள்வதில் பெருமையடைகிறேன்.

தேவை என்னும் உணர்வே, புதிய கண்டு பிடிப்புகளுக்குத் தாயகம், "(Necessity is the mother of invention) என்பார்கள்.

வளர்ந்து வரும் மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக உலகில் புதிதுபுதிதாய்த் தோன்றும் நோய்களினின்றும் மக்களைக் காப்பதற்காக மருத்துவத் துறை வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியது மிகப் பெரிய தேவையாகி

விட்டது. அதன் விளைவாக, மருத்துவக் கல்வியின் தரத்தை உயர்திடவும், மருத்துவம் தொடர்பான ஆராய்ச்சிகளின் தரத்தை மேம்படுத்திடவும், மரபு வழிப்பட்ட இந்திய மருத்துவ முறைகளின் தர மேம்பாட்டுச் சிறப்புகளைப் புலப்படுத்திடவும் உதவும் வகையில் மருத்துவக் கல்விக்குத் தனிப் பல்கலைக்கழகம் அமைக்கும் முயற்சிகள் தமிழகத்தில் தோன்றின. அம்முயற்சிகளின் அடிப்படையில் - இந்தியாவின் இரண்டாவது மருத்துவப் பல்கலைக் கழகமாகப் பிறப்பெடுத்தது தான் இந்த மருத்துவப் பல்கலைக் கழகம்.

தொடக்கத்தில் 35 கல்வி நிறுவனங்கள் மட்டுமே இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பட்டிருந்தன. தற்போது பொது மருத்துவம், பல் மருத்துவம் உட்பட மருத்துவம் சார்ந்த 124 கல்வி நிறுவனங்கள் இப்பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

மருத்துவத் துறையில் சிறந்து விளங்கும் 29 மூத்த வெளிநாட்டு மருத்துவ இயல் அறிஞர்கள் இப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு- அவ்வப்போது வருகை புரிந்து

அவர்களின் பரந்த அறிவும் விரிந்த அனுபவங்களும் மருத்துவம் பயிலும் நமது தமிழக மாணவச் செல்வங்களின் கூரிய அறிவு வளர்ச்சிக்குச் சீரிய முறையில் விருந்து படைக்கின்றன.

இப்பல்கலைக்கழகத்தின் கீழ் இணைக்கப் பெற்ற பல்வேறு கல்வி நிறுவனங்களுக்குத் தொடர் மருத்துவக் கல்வி முறைத் திட்டத்தின் கீழ் (Continuing Medical Education Programme) சென்று, கருத்தரங்குகள், விரிவுரைகள் முதலிய நிகழ்ச்சிகளில் பங்குபெற்று மருத்துவ அறிவியல் கருத்துக்களை மக்களுக்குப் பயன்தரும் வகையில் பரப்பிட, டாக்டர் மாதங்கி இராமகிருஷ்ணன், டாக்டர் மதனகோபால், டாக்டர் கே.எம். செரியன் முதலிய 16 மருத்துவ மாமணிகள் இப்பல்கலைக் கழகத்தின் சிறப்புப் பேராசிரியர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர்.

இங்கு மெட்லார்ஸ் என்னும் முறையில் கணினி முதலிய தகவல் கருவிகளைக் கொண்டு புதுடெல்லியில் உள்ள தேசிய மருத்துவ தகவல் மையத்தின் துணையோடு அமெரிக்காவிலுள்ள

தேசிய மருத்துவ அறிவியல் நிலையங்களிலிருந்து உலக அளவில் நிலவி வரும் அண்மைக்கால மருத்துவ ஆராய்ச்சிகள் குறித்த கருத்துக்களையும் தகவல்களையும் உடனுக்குடன் திரட்டிட முடிகிறது.

இத்தகைய சீரிய கட்டமைப்புகளைக் கொண்டுள்ள இந்த மருத்துவப் பல்கலைக்கழகம் என்னும் சுரங்கத்தில் வெட்டி எடுக்கப்பட்டுள்ள தங்கங்கள் நீங்கள்- பட்டை தீட்டப்பட்டுள்ள வைரங்கள் நீங்கள்.

இன்று நீங்கள் பெறும் பட்டம், உங்களுடைய உண்மையான, உறுதியான - ஓய்வில்லாத உழைப்பின் மூலம் நீங்கள் ஈட்டியுள்ள செல்வம். இதனை ஈட்டிட நீவிர் தந்த கடுமையான உழைப்பு பாராட்டுதற்குரியது. இதனை ஈட்டும் வழியில் உங்களுக்கு உதவிய பேராசிரியர்கள், உங்கள் பெற்றோர், உறவினர், மற்றோர் புரிந்த உதவிகள் எல்லாம் உங்களால் நன்றி காட்டத் தக்கவை.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - என்பது நம் நாட்டுப் பழமொழி. நோயின் உறுத்தலை நுகரும்போதுதான் இத்தொடரின் பொருள் சுடர்விடும் நமக்கு.

ஏழை எளிய நடுத்தர வர்க்கத்து மக்கள் ஏறத்தாழ 80 விழுக்காட்டினர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர். இவர்களில் பலர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறுவது போல, முழுவயிறு காணாதார், முதுகெலும்பு முறியப் பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணார், வலியோரின் பகடைக் காய்கள், ஓடப்பர் என்று பலதிறத்தினராய் வாழ்கின்றனர். நோயின் பிடியில் சிக்கிச் சீரழிபவர்கள் இவர்கள்.

இந்த மக்களின் நல்வாழ்வுக்காக இந்த அரசு மிகப்பலத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

தமிழக கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதிதரும் 1419 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 600-க்குக் கட்டடங்கள் இல்லை.

இந்த அரசு பொறுப்பேற்றபின் கடந்த ஆண்டில் 300, இந்த ஆண்டில் 300 என மொத்தம் 600 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டட வசதிசெய்திட ஆவன செய்துள்ளது.

கிராமப்புற மக்களுக்கு 24 மணி நேரமும் தடையின்றி மருத்துவ வசதி கிடைத்திட வேண்டும் என்பதற்காக - வட்டாரத் தலைமை இடங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்தும் 24 மணி நேரமும் செயல்பட வேண்டுமென ஆணையிடப்பட்டு முதல் கட்டமாக அவைகளில் 124 வட்டார சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன.

மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உட்பட அரசு மருத்துவமனைகள் அனைத்திலும் புறநோயாளிகளுக்குரிய சிகிச்சை நேரம் பகல் 12 மணி வரை நீட்டிக்கப் பட்டுள்ளதால் கிராமப் புற மக்கள் அதிக அளவில் மருத்துவ வசதியைப் பெற முடிகிறது.

ஏழை எளிய - நலிந்த பிரிவு மக்கள் பாதிக்கப் படுகின்றனர் என்பதால், முந்தைய அரசால் அறிவிக்கப் பட்டு, மருத்துவமனைகளுக்குச் செல்லும் பார்வை யாளர்களிடம் ரூபாய் 2 வீதம் வசூலிக்கப்பட்ட நுழைவுக் கட்டண முறை ரத்து செய்யப்பட்டு விட்டது.

1971 ஆம் ஆண்டில் தொழு நோயால் பீடிக்கப் பட்டவர்களின் மருத்துவ வசதிக்காக அமைக்கப்பட்ட மறுவாழ்வு இல்லங்களாலும் 1989ஆம் ஆண்டில் தொழுநோயை அறவே ஒழித்திட மேற்கொள்ளப்பட்ட கூட்டு மருத்துவ சிகிச்சைத் திட்டத்தினாலும் தமிழகத்தில் தொழு நோயாளிகளின் எண்ணிக்கை 10,000 பேரில் 120 பேர் என்று இருந்த நிலை மாறி தற்போது 10,000 பேரில் 7 பேர் எனக் குறைந்து விட்டது.

1972-73 ல் தமிழகம் முழுவதும் தீவிரமாய் செயல்படுத்தப்பட்டு உலக அளவில் பாராட்டப்பட்ட கண்ணொளி வழங்கும் திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்படும் வகையில் ரூ. 64 கோடி செலவில் கண்புரை நோய் சிகிச்சை அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வரும் ஆண்டில் இத்திட்டப்படி 3 லட்சம் பேருக்கு அறுவை சிகிச்சை செய்யப்படும்.

ஏழை எளியவர் அதிகம் பயன்பெறும் அரசு மருத்துவ மனைகளின் வசதிகளை மேம்படுத்து வதற்காக ரூ.5 கோடி செலவில் அரசு மருத்துவமனைகளுக்கு 10,000 படுக்கைகளும்

6,000 கட்டில்களும் வாங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

காலம் காலமாய் கல்வியில் பின்தங்கியுள்ள பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களைச் சார்ந்த முதல் 10 இடங்களை பெறுவோருக்குத் தொழில் கல்லூரிகளில் பயிலும் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கிறது.

நாடி வரும் நலிந்தோர் நலமடைய நல்ல முறையில் மருத்துவ வசதிகளை நல்கிட மதுரை அரசு மருத்துவக் கல்லூரிக்கு ரூ. 30 லட்சம் செலவில் மருத்துவக் கருவிகள் வாங்கிட அனுமதிக்கப்பட்டுள்ளது.

மருத்துவத் துறையில் முன்னேறியுள்ள பல உலக அமைப்புகளின் ஒத்துழைப்புகளையும், உதவிகளையும் ஈர்க்கும் நோக்கில் சென்னை மருத்துவக் கல்லூரியை நிகர்நிலைப் பல்கலைக் கழகமாக உயர்த்தி ஆணையிடப்பட்டு பல்கலைக்கழக மானியக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்திய முறை மருத்துவ மேம்பாட்டிற்காக வரும் ஆண்டில் ரூ. ~~57.13~~ 21 கோடி நிதி ஒதுக்கப்படும். அத்துடன் வயது முதிர்ந்த பரம்பரைச் சித்த மருத்துவர்களுக்கான மாத உதவித் தொகை ரூ. 150ல் இருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்படுகிறது. பாமர மக்களால் பட்டிதொட்டி எங்கும் பேணிப் பாதுகாக்கப்பட்டு வரும் நம்நாட்டு வைத்தியமுறை நாளும் வலுப்பெற வேண்டுமெனும் நல்லுணர்வோடு இந்திய முறை மருத்துவம் தமிழகத்தில் தாயன்போடு வளர்க்கப்பட்டு வருவதை நீங்கள் நன்கறிவீர்கள்.

இதன் வளர்ச்சி வேகத்தைத் தூண்ட வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் உங்கள் கைகளில்தான் உள்ளன என்பதை மறந்திட வேண்டாம்.

வெளிநாடு வாழ் இந்தியருக்கு என்ற பெயரால் பெருந்தொகைக்கு விற்கப்பட்டு வந்த 30 மருத்துவக் கல்வி இடங்கள் இந்த அரசினால் கடந்த ஆண்டு முதல் தடுக்கப்பட்டு தகுதி வாய்ந்தோருக்குக் கிடைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் முகத்தான் இலங்கைத் தமிழர்தம் குழந்தைகளுக்கு மருத்துவக் கல்லூரிகளில் 20 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இப்படி ஏழையெளியவரின் நலன்களை முன்வைத்தே இத்தகைய திட்டங்களை தீட்டிவரும் அரசின் இதயத்தை உணர்ந்திட வேண்டுகிறேன். அரசின் வழியில் கிராமப்புற ஏழைகளுக்குத் தொண்டாற்றிட வேண்டும் என்னும் உணர்வு- உங்களின் தலையாய குறிக்கோளாய் அமைந்திட வேண்டுமென்று ஆவல் கொண்டுள்ளேன்.

உலகை அச்சுறுத்திக் கொண்டுள்ள எய்ட்ஸ் என்னும் உயிர்க்கொல்லி நோயை தடுக்க ரூ.20 கோடி செலவில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து மக்களுக்கு விழிப்புணர்ச்சியூட்டித் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது தமிழக அரசு. இப்பிரச்சினையின் உள்ஆழத்தையும், அவசரத் தேவையையும் கருத்திற்கொண்டு அக்கறையுடன் ஈடுபட்டு மனித உயிர்களைக் காக்கும் மகத்தான பணியில் உங்களை நீங்களே ஈடுபடுத்திக்

கொண்டிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூ லோர் வளிமுதலா எண்ணிய மூன்று

எனக் கூறும் குறள்-வாதம், பித்தம், சளி ஆகிய மூன்றின் அளவிலும் மாறுபாடு ஏற்படின் உடல்நலம் கெடும் என 2000 ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ள மருத்துவ நுட்பத்தைப் போற்றும் நெறியில் இனி மருந்தின் பெயர்களைத் தமிழிலேயே எழுதித் தரவேண்டுமென இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

உலகின் சிறந்த மொழிகளில் ஒன்றாய்த் திகழும் நம் தமிழ் மொழியில் மருத்துவம் உள்ளிட்ட அனைத்துக் கலைகளையும் கற்பிக்க ஆர்வம் கொண்டுள்ளது இந்த அரசு.

நாம் யார் - நம் சமுதாயம் எது - நம்மை உயர்த்திடும் சமுதாயத்திற்கு நாம் ஆற்ற வேண்டிய அறப்பணி எது எனத்தேர்ந்து, தெளிந்து - அதனை நிறைவேற்றிட சூளுரைத்திட வேண்டுகிறேன்.

உயர்ந்தவர்கள் குனிந்து நோக்கி உதவிக்கரம் நீட்டுவதன் மூலம்தான் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்று மெல்ல எழுந்து மேலே வரமுடியும் என்ற உணர்வுடன் செயல்பட வேண்டுகிறேன்.

தமிழகத்திற்கு என ஒரு தனிச்சிறப்பு எப்போதும் உண்டு. எதையும் முதலில் செய்வது - அதிலும் முத்திரை பதிக்கச் செய்வது என்பது நமக்குள்ள பரம்பரை மரபு என்பதை நீங்கள் அறிவீர்கள்.

முதுபெரும் சமூக நல சேவகியாய்த் திகழ்ந்த டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் ஆசியாவிலேயே முதல் பெண் மருத்துவராய் விளங்கியது மட்டுமல்லாமல் மிகச் சிறந்த மருத்துவராகவும் சாதனை புரிந்தவர்கள்.

உலகப் புகழ் வாய்ந்த நம் சென்னை மருத்துவக் கல்லூரியில் முதல்வராக நியமனம் பெற்ற முதல் இந்தியர், நம் ஏ.ஏல். முதலியார் அவர்கள்.

மருந்தாக்கக் கலையில் பட்டப்படிப்பை இந்தியாவிலேயே முதன்முதலாகத் தொடங்கியது நம் சென்னைப் பல்கலைக்கழகமே.

பேறு காலத்தில் மரணம் எய்தும் பெண்கள் குறித்து முதன்முதல் ஆய்வு செய்தது நமது சென்னைப் பல்கலைக்கழகமே.

அனைந்திந்திய மகப்பேறு மாநாட்டை முதன்முதல் நடத்தியதும் நமது சென்னை மாநகரமே.

அவ்வாறே தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கைகளிலும், அதற்குரிய மருத்துவ வசதிகளை அளிப்பதிலும் இந்தியாவில் முதலிடம் பெற்றுள்ளது நமது தமிழகமே.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவதிலும் தமிழகம் இந்திய அளவில் இரண்டாம் இடம் பெற்றுச் சிறந்துள்ளது.

சிறுகுழந்தைகள் இறப்பு வீதத்தைக் குறைத்ததில் இந்திய அளவில் மூன்றாம் இடம் பெற்றுள்ளது தமிழகம்.

இதய அறுவை, சிறுநீரக அறுவை முதலியவை களுக்காக உயர்ந்த மருத்துவ வசதிகளைத் தேடி வெளிநாடுகளுக்குச் சென்று வந்த நிலைமைகள் படிப்படியாய் மாறி இன்று வெளிநாடுகளிலிருந்து நம் சென்னையை நோக்கி மருத்துவம் செய்துகொள்ளப் பலர் வருவது இயல்பாகி வருகிறது.

இப்படி தரமான மருத்துவ வசதிகளை நமது தமிழகம் அரசு மருத்துவமனைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் பெற்றுச் சிறப்படைந்து வருகிறது.

இவ்வேளையில் பட்டம் பெறும் நீங்கள் பெருமைக்குரியவர்கள். உங்கள் உழைப்பினாலும், அசையா ஊக்கத்தினாலும் உலக அளவில் தமிழகமும் - இந்த மருத்துவப் பல்கலைக் கழகமும் உன்னதமான புகழை ஈட்டிடவேண்டும்.

இதனைக் குறிக்கோளாகக் கொண்டு ஆராய்ச்சிகளைத் தொடங்கிட - தொடர்ந்திடத் தக்கவகையில் உங்களின் தூய தொண்டுகள் சிறந்திட வேண்டுமென்று கூறி "தமிழ் உமது முரசு

ஆகட்டும் - பண்பாடு உமது கவசமாகட்டும் - அறிவு உமது படைக்கலனாகட்டும் - அறநெறி உமது வழித்துணையாகட்டும் - உறுதியுடன் செல்வீர் - ஊக்கமுடன் பணிபுரிவீர் - ஏழை எளியோர் ஏற்றம் பெறும் வகையில் வெற்றியினை ஈட்டிடுவீர்'' என என் இதய அன்பினால் வாழ்த்துக்கள் மொழிந்து விடைபெறுகிறேன்.